பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
*08 01 2026 THURSDAY 12 40 PM*
ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. கொள்கைகளில் எவ்வித சமரசமும் இல்லை என்பதையே சோம்நாத் பெருமை திருவிழா எடுத்துரைப்பதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

2. மக்கள்தொகை கணக்கெடுப்பிற்கான முதல்கட்ட அறிவிக்கையை மத்திய அரசு வெளியிட்டுள்ளது.

3. ஆப்பரேஷன் சிந்தூரின் போது, இந்தியாவின் தாக்குதலை தாக்குப்பிடிக்க முடியாமல் பாகிஸ்தான், அமெரிக்காவின் உதவி கோரியது தொடர்பான ஆவணங்கள் வெளியாகியுள்ளன.

4. பல்வேறு சர்வதேச அமைப்புகளிலிருந்து விலகுவதாக அமெரிக்கா அறிவித்துள்ளது.

5. புதுதில்லி சர்வதேச ஜூனியர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் *Arnav Paparkar* காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

>>>>>>>><<<<<<<<

கொள்கைகளில் எவ்வித சமரசமும் இல்லை என்பதையே சோம்நாத் பெருமை திருவிழா எடுத்துரைப்பதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

சமூகவலைதளத்தில் இதனை தெரிவித்துள்ள அவர், இந்த திருவிழா இன்று தொடங்குவதை சுட்டிக்காட்டியுள்ளார்.

ஓராண்டு காலம் இந்த திருவிழா நடைபெறவுள்ளதாகவும் அவர் கூறினார்.

ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர், சோம்நாத் கோவில் முதல்முறையாக தாக்குதலுக்கு உள்ளானதாகவும், இதனைத் தொடர்ந்து அக்கோவிலில் பல்வேறு தாக்குதல்கள் நடைபெற்ற போதிலும், மக்களின் நம்பிக்கை அவற்றை முறியடித்ததாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த திருவிழாவில் வரும் 11ஆம் தேதி பிரதமர் பங்கேற்கவுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

>>>>>>>><<<<<<<<

மக்கள்தொகை கணக்கெடுப்பிற்கான முதல்கட்ட அறிவிக்கையை மத்திய அரசு வெளியிட்டுள்ளது.

இதன்படி வீடுகளை கணக்கெடுக்கும் பணி, வரும் ஏப்ரல் மாதம் 1ஆம் தேதி தொடங்கி, செப்டம்பர் மாதம் 30ஆம் தேதி வரை நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்கள் வாரியாக. 30 நாட்களுக்கு இந்தப் பணிகள் நடைபெறும் என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதற்கான அட்டவணையை சம்பந்தப்பட்ட மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்கள் தனித்தனியாக வெளியிடும் என்று எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

முதல்முறையாக டிஜிட்டல் தொழில்நுட்பத்தை பயன்படுத்தி, இப்பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளதாக அவர் மேலும் கூறுகிறார்.

இதற்கிடையே, ஒடிசாவில் முதற்கட்ட மக்கள்தொகை கணக்கெடுக்கும் பணிகளில் ஒரு லட்சத்திற்கும் மேற்பட்டோர் ஈடுபடுத்தப்படவுள்ளதாக இதற்கான இயக்குநர் திரு. Nikil Bhawan Kalyan கூறியுள்ளார்.

இதில் வீடுகள் கணக்கெடுக்கும் பணி ஏப்ரல் மாதம் 1ஆம் தேதி தொடங்கி ஒரு மாதத்திற்கு நடைபெறும் என்றும் அவர் கூறினார்.

>>>>>>>><<<<<<<<

ஆப்பரேஷன் சிந்தூரின் போது, இந்தியாவின் தாக்குதலை தாக்குப்பிடிக்க முடியாமல் பாகிஸ்தான், அமெரிக்காவின் உதவி கோரியது தொடர்பான ஆவணங்கள் வெளியாகியுள்ளன.

பஹல்காம் தீவிரவாத தாக்குதலுக்கு பதிலடி கொடுக்கும் வகையில், இந்தியா மேற்கொண்ட இந்த நடவடிக்கை, பாகிஸ்தானை கதிகலங்க வைத்ததாக அந்த ஆவணங்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தானைச் சேர்ந்த வெளியுறவு துறை அதிகாரிகளும், பாதுகாப்பு துறை அதிகாரிகளும், 50க்கு மேற்பட்ட முறை மின்னஞ்சல் வாயிலாகவும், கடிதங்கள் வாயிலாகவும், அமெரிக்காவை தொடர்பு கொண்டு தாக்குதலை நிறுத்த கோரியுள்ளன.

இதைத்தவிர, அமெரிக்காவின் அரசு அதிகாரிகள் மற்றும் அந்நாட்டு ஊடகங்களை சேர்ந்தவர்களையும், பாகிஸ்தான் தொடர்பு கொண்டு உதவி கோரியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவில் வெளியான ஆவணங்களில் இந்த தகவல்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

>>>>>>><<<<<<<<

மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷாவை, அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி நேற்று புதுதில்லியில் சந்தித்துப் பேசினார்.

இதனைத் தொடர்ந்து சென்னை திரும்பும் முன், விமான நிலையத்தில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய திரு. எடப்பாடி பழனிசாமி, தமிழக சட்டப்பேரவை தேர்தலில் மேற்கொள்ள வேண்டிய அணுகுமுறைகள் குறித்து திரு. அமித் ஷா-வுடன் விவாதித்ததாக கூறினார்.

தமிழகத்தில் திமுக அரசின் நிர்வாக தோல்வி காரணமாக, பெண்களுக்கு பாதுகாப்பற்ற சூழல் நிலவுவதாக அவர் குற்றம் சாட்டினார்.

தங்கள் கூட்டணியில் மேலும் சில கட்சிகள் இடம்பெறும் என்றும் திரு. எடப்பாடி பழனிசாமி தெரிவித்தார்.

>>>>>>>><<<<<<<<

நாட்டின் எதிர்காலம் இளையோர் கையில் உள்ளதாக மத்திய அமைச்சர் திரு. மன்சுக் மாண்டவியா தெரிவித்துள்ளார்.

சமூகவலைதளத்தில் இதனை பதிவு செய்துள்ள அவர், எந்வொரு சவாலான சூழ்நிலையையும் எதிர்கொள்ளும் திறன் நமது இளையோர் சக்திக்கு உள்ளதாக கூறினார்.

வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்குவதில் இளையோருக்கு முக்கியப் பங்கு உள்ளதாகவும் திரு. மன்சுக் மாண்டவியா அதில் குறிப்பிட்டுள்ளார்.

>>>>>>>><<<<<<<<

வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான ஊரக வேலைவாய்ப்பு உறுதி மற்றும் வாழ்வாதார சட்டம், ஊழலுக்கு எதிரான துல்லிய தாக்குதல் என்று மத்திய நிதித்துறை இணையமைச்சர் திரு. பங்கஜ் சௌத்ரி கூறியுள்ளார்.

வாரணாசியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், முந்தைய திட்டத்தில் ஏராளமான முறைகேடுகள் நடைபெற்றதை கருத்தில் கொண்டு, அதனை தடுக்கும் வகையில் இந்த சட்டம் கொண்டு வரப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

>>>>>>>><<<<<<<<

அரசு திட்டங்களின் செயலாக்கத்தை தகவல் தொழில்நுட்பம் வாயிலாக கண்காணிக்கும் பிரதமரின் பிரகதி திட்டத்தின் 50வது கூட்டம் வெற்றிகரமாக நடைபெற்றது.

கடந்த 2015ஆம் ஆண்டு பிரதமர் திரு. நரேந்திர மோடி இதனை அறிமுகப்படுத்தினார்.

*இந்த தொழில்நுட்ப வசதியை பயன்படுத்தி, மத்திய மாநில அரசுகளின் அதிகாரிகளுடன் ஆலோசனை மேற்கொள்ளும் பிரதமர், திட்டங்கள் குறித்த காலத்திற்குள் நிறைவேற்றப்படுவதை உறுதி செய்தார்.*

*இதன் காரணமாக, கட்டமைப்பு வளர்ச்சிக்கான திட்டங்களை செயல்படுத்துவதில் ஏற்பட்ட காலதாமதங்கள் தவிர்க்கப்பட்டன.*

*கூட்டாட்சி தத்துவத்திற்கு எடுத்துக்காட்டாகவும் இந்த திட்டம் திகழ்ந்து வருகிறது.*

*இதற்கிடையே, இந்த திட்டம் சர்வதேச அமைப்புகளின் பாராட்டுகளையும் பெற்றுள்ளதாக மூத்த பத்திரிகையாளர் திரு. வெங்கடேஷ் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.*

*(சவுண்ட் பைட் - வெங்கடேஷ் 49 செகண்ட்ஸ்)*

*>>>>>>>><<<<<<<<*

*தமிழகத்தில் பொங்கல் பரிசுத்தொகுப்பு விநியோகம் இன்று தொடங்கியது.*

*சென்னையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் இதனை தொடங்கி வைத்தார்.*

*மாவட்டங்களில் அமைச்சர்கள், பொங்கல் பரிசுத் தொகுப்பை பயனாளிகளுக்கு வழங்கினர்.*

*>>>>>>>><<<<<<<<*

*மாநிலங்களின் தலைமை தேர்தல் அதிகாரிகள் பங்கேற்றுள்ள ஒருநாள் மாநாடு, தற்போது புதுதில்லியில் நடைபெற்று வருகிறது.*

*தலைமைத் தேர்தல் ஆணையர் திரு. க்யானேஷ் குமார் இதனை தொடங்கி வைத்தார்.*

*>>>>>>>><<<<<<<<*

நாடுமுழுவதும் 6 மாநிலங்களுக்கு உட்பட்ட 15 இடங்களில் அமலாக்கத் துறையினர் சோதனை மேற்கொண்டு வருகின்றனர்.

தமிழகம், கேரளா, மேற்குவங்கம், பீகார், உத்தரபிரதேசம், குஜராத் ஆகிய மாநிலங்களில் இந்த சோதனை நடைபெற்று வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

அரசு வேலை வாங்கித் தருவதாக கூறி நடைபெற்ற முறைகேடு புகார் தொடர்பாகவும், சட்டவிரோத பணப்பரிவர்த்தனை புகார்கள் குறித்தும் அமலாக்கத்துறை இந்த சோதனையை மேற்கொண்டு வருகிறது.

>>>>>>>><<<<<<<<

தெலங்கானாவில் சங்கராந்தி பண்டிகையை முன்னிட்டு பட்டம் மற்றும் இனிப்பு திருவிழாவின் ஒரு பகுதியாக ட்ரோன் மற்றும் பலூன் கண்காட்சியும் நடைபெறவுள்ளதாக அம்மாநில சுற்றுலாத்துறை அமைச்சர் திரு. கிருஷ்ணா ராவ் கூறியுள்ளார்.

ஹைதராபாதில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், வரும் 16 மற்றும் 17ஆம் தேதிகளில் இந்த திருவிழா நடைபெறவுள்ளதாக கூறினார்.

ஹைதராபாதின் பல்வேறு பகுதிகளில் நடைபெறவுள்ள இந்த திருவிழாவிற்கான ஏற்பாடுகள் முழுவீச்சில் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

>>>>>>>><<<<<<<<

ஜம்மு காஷ்மீரில் தீவிரவாதிகளுக்கு எதிரான நடவடிக்கைகளை பாதுகாப்புப் படையினர் மீண்டும் தொடங்கியுள்ளனர்.

கத்துவா மாவட்டத்திற்கு உட்பட்ட வனப்பகுதியில் தீவிர தேடுதல் வேட்டையில் பாதுகாப்பு படையினர் ஈடுபட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

>>>>>>>><<<<<<<<

பல்வேறு சர்வதேச அமைப்புகளிலிருந்து விலகுவதாக அமெரிக்க அதிபர் திரு. டோனல்ட் ட்ரம்ப் அறிவித்துள்ளார்.

இதன்மூலம், 66-க்கு மேற்பட்ட நிறுவனங்கள், அமைப்புகளுக்கு அமெரிக்கா அளித்து வரும் ஆதரவு விலக்கிக் கொள்ளப்பட்டுள்ளது.

நாட்டின் நலனை கருத்தில் கொண்டு இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதாக திரு. ட்ரம்ப் கூறியுள்ளார்.

>>>>>>><<<<<<<<

வங்கக்கடலில் நிலை கொண்டுள்ள ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம், இலங்கை கடற்பகுதியில் நாளை கரையை கடக்கவுள்ளதாக வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

இலங்கையின் ஹம்பன்தோட்டா – கல்முனை அருகே இது கரையை கடக்கக்கூடும் என்று வானிலை ஆய்வு மையத்தின் செய்திக்குறிப்பு தெரவிக்கிறது.

>>>>>>><<<<<<<<

புதுதில்லி சர்வதேச ஜூனியர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் *Arnav Paparkar* காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய ஆட்டத்தில் அவர் 6-2, 6-0 என்ற செட்கணக்கில் எகிப்தின் *Eyad Sherif*-ஐ வென்றார்.

>>>>>>><<<<<<<<

தோஹா சர்வதேச டேபிள் டென்னிஸ் போட்டியின் முதல் சுற்று ஆட்டத்தில் இந்தியாவின் *Manav Thakkar*, இன்று பிரான்ஸின் *Simon Gauzy*-யை எதிர்கொள்கிறார்.

>>>>>>><<<<<<<<

***விஜய் அஸாரே கோப்பைக்கான ஒருநாள் கிரிக்கெட் போட்டியில், அஹமதாபாதில் தற்போது நடைபெற்று வரும் ஆட்டத்தில், கேரள அணிக்கு எதிராக முதலில் பேட் செய்து வரும் தமிழக அணி சற்றுமுன்வரை 41 ஓவரில் 3 விக்கெட் இழப்புக்கு 209 ரன் எடுத்துள்ளது.***

*>>>>>>>><<<<<<<<*